Registered as a News Paper in Sri LanKa.

# முஸ்லிம் காங்கிரஸ்

مسلم کنگریس

MUSLIM CONGRESS

ICE CREAM

'அல்லாஹ்வின் வேதமெனும், கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். பிரிந்து விடாதீர்கள்' -அல்குர்ஆன்

விலை ரூபா 3-00

மலர் 5 ★ ரபியுல்-அவ்வல் - ரபியுல்-ஆகிர் - ஹிஜ்ரி 1411- ★ ஒக்டோபர்-31-1990 ★ இதழ் 11 தொலைபேசி. 431711

# சாவகச்சேரி பள்ளிவாசல் பூட்டு!

# போட்ட உடுப்போடும் சமையல் பாத்திரத்தோடும்

# வெளியேற புலிகள் உத்தரவு!

(விஷேட நிருபர், ஜனதாஸன்)

## சொந்தமென வாழ்ந்தவரை துரத்தி, கடத்தி கப்பம் கேட்டு, கொள்ளை அடித்து கொடுமைப்படுத்துவது பேடித்தனம்! தமிழர்களின் பண்பாடு தலைகுனிகின்றதா? யாழில் கடத்தப்பட்ட முஸ்லிம்கள் அதோகதியா?

பள்ளி வாசலுக்கு பூட்டு! போட்ட உடுப்போடும் சமையல் பாத்திரத்தோடும் வெளியேற புலிகள் உத்தரவு! கடைகள், வீடுகள் கண்ணெதிரில் கொள்ளை! காணி உறுதிகளும் பறிக்கப்பட்டன! உறவினரைப்பார்க்க யாழ் செல்லவும் அனுமதி மறுப்பு!

'' அவர்களுக்கும் இதேகதிதான் அங்கு செல்லத்தேவையில்லை'' பலநாள் பட்டினி! கண்ணீரும் கம்பலையுமாக காலம்காலமாக தாம்வாழ்ந்து வந்த தம் தாயகத்திலிருந்து சாவகச்சேரி முஸ்லிம்கள்விரட்டப்பட்டனர்!

''ஆட்கள் இருக்காத வீடுகள் எடுக்கப்படும்'' என்ற புலிகளின் அறிவித்தலைத் தொடர்ந்து, அங்கு யாழ் நகரிலேயேதமது வீடுகளில் தங்கிருந்த முஸ்லிம்கள் பலவந்தமாக 'பங்கர் வெட்டுவதற்கு கொண்டு செல்லப்படுகின்றனர். வசதி படைத்த முஸ்லிம்கள், கடத்தப்பட்டு காலுக்கும் கையிக்கும் விலங்கிடப்பட்ட நிலை துன்புறுத்தப்படுகிறார்கள். இதுவரை கடத்தப்பட்ட இருபத்தாறு முஸ்லிம்களுக்கு என்ன நடந்தது?என்று இன்று வரை அறிய முடியவில்லை. அவர்களைப்பற்றி, உறவினர் போய்கேட்டபோது, ''உயிருக்குஉத்தரவாதம்தருவதற்கு பணத்துக்கு உத்தரவாதம் தரவேண்டும் என்கிறார்கள்.

யாழ்ப்பாணம் சோனகதெருவிலுள்ள பல வீடுகளும் கடைகளும், தொழிற்கூடங்களும் சூறையாடப்பட்டு, வெறிச்சோடிக்கிடக்கின்றன.கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான முஸ்லிம்களின் சொத்துக்கள் பட்டபகலில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. தடுத்து பணயம்-வைக்கப்பட்டிருக்கும் முஸ்லிம்களிடமிருந்து, தலைக்குத்தக்கவாறு 2 கோடி ரூபா தொடக்கம் 1 கோடி வரையில் கப்பம் கேட்டு காலக் கெடுதி விடுக்கப் பட்டுள்ளது.

இதில், மிகபெரும் துரோகம் என்னவென்றால், இதுகால வரையும் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லாமல் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள் போல வாழ்ந்து, நிர்பந்தம் காரணமாக - விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எல்லாவகையிலும் உதவிசெய்து வந்த யாழ் முஸ்லிம்களை புலிகள் வஞ்சித்துவிட்டனர் புலிகள் என்றால்'' தாம் துரோகிகள்'' என்று, பிரகடனம் செய்து விட்டார்கள்! அரசியற் காரணங்களுக்காக யாழ் முஸ்லிம்கள் கடத்தப்படவுமில்லை! துரத்தப்படவுமில்லை! துன்புறுத்தப்படவுமில்லை!!

முஸ்லிம்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் ஒட்டாண்டிகள் ஆக்கப்படவேண்டும். அவர்களின் பொருளாதாரம் அழிக்கப்படவேண்டும்! அத்தோடு அவர்களின் முதுகுமுள்ளு முறிக்கப்படவேண்டும்! அவர்கள்காலமெல்லாம் தமது அடிமைகளாக கிடக்கவேண்டும். என்ற, காரணங்களுக்காகத் தான் தம்மை, நம்பிய யாழ் முஸ்லிம்களுக்கு இந்த துரோகத்தை செய்திருக்கிறார்கள்.

இந்தியா பிரிந்து, பாகிஸ்தான் உருவாக்கப்பட்டபோது கூட தமது தாயகமான இந்தியாவைவிட்டு வெளியேற விரும்பாதகோடிக்கணக்கான முஸ்லிம்கள் இந்தியாவிலேயே தங்கிவிட்டனர். இந்தியமண் அவர்களைஏற்றுக்கொண்டது. இன்றும் இந்தியாவில் பத்து கோடி முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

வடக்கு கிழக்கு பிரிக்கப்படக்கூடாது! என்பதில் இன்னும் உறுதியாக நிற்கும் முஸ்லிம்களை புரிந்து கொள்ளாமல்-பரஸ்பரம், தமிழர்களும் முஸ்லிம்களும் தமது தனித்துவத்தையும் பாதுகாப்பையும் அங்கீகரிக்காமல்-யாழ்பாணத்திலும் சாவகச்சேரியிலும், மண்கும்பானிலும் பரம்பரை பரம்பரையாக வாழும் முஸ்லிம்களை சூறையாடி துரத்தியதன் நோக்கம் என்ன?

கிழக்கில் முஸ்லிம்கள்பெரும்பான்மையாக, வாழும்பிரதேசங்களிருந்து சிறும்பான்மையாகவாழும்தமிழர்களைதுரத்தவேண்டும் அவர்களின்சொத்துக்களை சூறையாடவேண்டும்! என்று புலிகள் விரும்புகின்றார்களா? முஸ்லிம்களின் இரத்தத்தில் அப்படியிருந்ததில்லை அவ்வாறு இருப்பவன முஸ்லிமாகவும் இருக்கவும் முடியாது! ஆனால் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் காரணமாக அவ்வாறான சூழ்நிலை அங்குஏற்படுத்தும் நோக்கமா?

எவ்வாறாயினும் வட கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்கள், தமிழ் மக்களோடு சமாதானமாகவும் சந்தோஷமாகவும் வாழவே விரும்புகின்றார்கள். எனவே, தமது ஆளுகைக்குட்பட்டு வாழ்ந்த முஸ்லிம்களை புலிகள் துரத்தியதற்கும் துன்புறுத்தியதற்கும் என்ன பதில் சொல்லவார்கள்? கோடி கோடியாக கப்பம் கேட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முஸ்லிம்களை உடன் விடுவிக்க வேண்டும்! அவர்கள் செய்த நன்றிகளையும் உதவிகளையும் நினைத்துப் பார்க்கவேண்டும்! சுமார் நூறு வீதமான தமிழர்கள் மத்தியில் வாழும் இரண்டு வீதமான யாழ்சாவகச்சேரி முஸ்லிம்களை, பரம்பரை பரம்பரையாக சொந்தமென வாழ்ந்தவர்களை, இந்தவிதத்தில் பேடித்தனமாக, துரத்துவதும் கப்பம் கேட்டு கொடுமைப்படுத்துவதும் கொள்ளையடிப்பதும் உலகில் எந்தவரலாற்றிலும் நடந்ததில்லை!! அதுவும் தமிழர் பண்பாடும் நாகரிகமும் இத்தகைய தலைகுனிந்த, இரத்தக்கறைபடிந்த வரலாறுமை எழுதுவதற்கு இடம்கொடுத்திருப்பது தமிழர்களின் துரதிஷ்டமேயாகும்.

## நாட்டின்தலைவருக்கு முஸ்லிம்தலைவர் பாராட்டு!

நிந்தவூர் அல் - அஷ்றக் மத்திய மஹா வித்தியாலயத்திற்கு, இலங்கை கல்வி நிர்வாக சேவையில் திறமையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட ஜனாப்,எம், ரி. அப்துல் நிஸாம் கல்விஅமைச்சின் கட்டளையின்பேரில் அதிபராக 1990-09-24 ஆந்தேதி கடமைஏற்றார்.ஆனால், திடீரென்று மீண்டும் 1990-10-12 ஆந்தேதி. அம்பாறை கல்வித்திணைக்களத்திற்கு இடம்மாற்றம் செய்யப்பட்டு மீண்டும் அங்கிருந்து, 1990-10-16 ஆந் தேதி, மாத்தறை கல்வித்திணைக்களத்திற்கு கல்வி அதிகாரியாக அனுப்பப்பட்டார்.

சில அரசியல் நோக்கங்களுக்காக திட்டமிட்டுமேற்கொள்ளப்பட்ட இந்த இட மாற்ற விவகாரம், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், திகாமடுள்ள மாவட்ட மக்கள் பிரதியுமான ,சகோ.எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களால் மாண்புமிகுஜனாதிபதி அவர்களின்நேரடிகவனத்திற்குகொண்டு வரப்பட்டது.

ஜனாப் நிஜாம், கலைக்கப்பட்டவடகிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர், அல்ஹாஜ் எம்.ரி. ஹசன அலியின் சகோதரர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த இடமாற்ற விவகாரத்தை பரீசிலனைக்கு எடுத்துக்கொண்ட ஜனாதிபதி அவர்கள், அதிபர் நியமனத்தை உறுதி செய்ததோடு இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறும் உடனடியாகவே பணிப்புரை வழங்கினார்.

அரசியல் நோக்கத்திற்காக அல்லாமல், திறமையின் அடிப்படையில்இந்தஇடமாற்றவிவகாரத்தை கையாண்டு நியாயம் வழங்கிய நாட்டின் தலைவருக்கு,முஸ்லிம்களின் தலைவர் நன்றியும் பாராட்டும் தெரிவித்தார்.

THE BULLETIN OF THE SRI LANKA MUSLIM CONGRESS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் காங்கிரஸ்

51,வொக்ஷல் லேன்,கொழும்பு:2.தொ.பேசி:431711

# ஆடுகள் நனைகின்றன! என்று, ஓநாய்கள் அழுகின்றன! ஆடுகளே ஜாக்கிரதை!!

நேற்று, கோடீஸ்வரர்களாக இருந்தவர்கள், இன்று, கோவணாண்டிகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்! நேற்றுக் காலை எட்டுமணிவரையும், உயிர் நண்பர்களாக இருந்தவர்கள், திடீரென்று ஒன்பதுமணிக்கு விரோதிகளாகவும் துரோகிகளாகவும் தம்மை பிரகடனம் செய்தார்கள்! உயிரைமட்டும் கையில் பிடித்துக்கொண்டு, கண்ணீரும் கம்பலையுமாக காலம் காலமாக தாம்தேடிய தேட்டங்கள் அனைத்தையும் கண்ணெதிரிலேயே கொள்ளை கொடுத்துவிட்டு, மானம்மரியாதையும் இழந்து, அடிப்படை மனிதாபிமானம்கூட காட்டப்படாத நிலையில், மன்னார் - யாழ் முஸ்லிம்கள் தமது, தாயகத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்டிருக்கிறார்கள்!

நிராயுதபாணிகளான அப்பாவிச்சனங்களை ஆயுதமுனையில் கொள்ளையடித்து, துரத்தியதில் படுகோழைகளான சருகுபுலிகளுக்குத்தான்எத்தனை மகிழ்ச்சி!எவ்வளவுலாபம்!

யூதர்கள், எவ்வாறு உலக அபிப்பிராயத்தின் முன்பு தனிமைப்படுத்தப்பட்டு - தள்ளிவைக்கப்பட்டு - தலைகுனிந்து நிற்கிறார்களோ; அவ்வாறே புலிப்பயங்கரவாதிகளும் தனிமைப்படுத்தப்பட்டு தள்ளிவைக்கப்பட்டுள்ளார்கள்! இந்த படுபாவிப்புலிகளின் துரோகத்தனங்களுக்காகவும் அட்டூழியங்களுக்காகவும் தமிழினம், வரலாற்றில் தலைகுனியப் போவதும் தவிர்க்க முடியாமற் போய்விட்டது! தமது உடன்பிறப்புகள் போல வாழ்ந்த யாழ்-மன்னார் முஸ்லிம்களுக்குச் செய்த பாவத்தை போக்குவதற்கு இவர்கள் எத்தனை கங்கையில் மூழ்கினாலும் திரப்போவதில்லை!

இதற்கிடையில், படுகோழைத்தனமாகவும் அயோக்கியத்தனமாகவும் ''மன்னார்-யாழ் முஸ்லிம்களை தாம் வெளியேறச் சொல்லவில்லை'' என்று, சென்னையில், யோக்கியப் பிரகடனம் செய்வதற்கு முயன்றிருக்கும் ''சத்தியவேங்கை', களின் இந்தமாதிரியான அறிக்கைகள் நமக்கும், உலகத்திற்கும் புதியதல்ல! ஆனால், உலகத்தை இன்னும் ஏமாற்றலாம்! என்று, மடப்புலிகள் நினைப்பதைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லை! ஆயினும் ஒன்றைமட்டும் நாம் தெளிவாகப்புரிந்து வைத்துள்ளோம்! முட்டாள் ஒருவன், தனது சக்திக்குக்கூடிய பாறாங்கல்லைத்தூக்கி எறிய முற்பட்டால் என்னநடக்கும்? அது அவனது கால்களிலேயே விழுந்து விடாதா? அதுதான் முட்டாள் கோஷ்டிகளான சருகு புலிகளுக்கும் நடந்துகொண்டிருக்கின்றது!

அது அவ்வாறிருக்க, ''முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்துள்ள முஸ்லிம் மாகாணசபைக்கோரிக்கையினாற்தான் மன்னார் மாவட்ட முஸ்லிம்கள் துரத்தப்பட்டார்கள்! என்ற, இட்டுக்கட்டிய பொய்யை, தமது பேரினவாத அரசியல் லாபத்திற்காக அமைச்சர் பெருமான்கள் அவிழ்த்துவிட்டுப்பார்த்தார்கள்! தற்காலிகமாகமேனும் அது எடுபடவில்லை!
அதிகாரத்தில் இருப்பவர்களுக்கே ஆலவட்டம்பிடித்து சாமரைவிசிகய ஆதாயம்தேடும்சமூகத் துரோகிகள், அமைச்சர்களுக்கு, பக்கவாத்தியம் வாசித்தும் பார்த்தார்கள்! முஸ்லிம் சமூகம் அதை கணக்கெடுக்கவேஇல்லை!

இனப்பிரச்சினைக்கு திர்வுகாணப்படவேண்டும்! என்ற, இன்றையப்போராட்டத்தில், நாட்டைப்பிரிக்கவேண்டும்! என்பவர்கள் ஒருபுறமும், கிழக்கைப் பிரிக்கவேண்டும்! என்பவர்கள் மறுபுறமும் வடக்கு - கிழக்கு இணைந்த மானிலத்தில் சிறுபான்மை முஸ்லிம், சிங்கள சமூகங்களுக்கும் நியாயம் வழங்கப்படவேண்டும்! என்று, சொல்பவர்கள் இன்னொரு புறமும் நிற்கிறார்கள்!

மன்னார், மாவட்டத்தில் உள்ள முஸ்லிம்களை விரட்டியடித்தபின்னர் அதே மூச்சில், யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த 30,000 முஸ்லிம்களையும்புலிகள்விரட்டி அடித்துள்ளார்கள்!

ஏறக்குறைய ஐநூறு ஆண்டுகளாக, தமிழர்களோடு உடன்பிறப்புகளாக, அமைதியாகவும், சந்தோஷமாகவும் வாழ்ந்த முஸ்லிம்களை துரத்தியடித்துள்ளார்கள்! கடத்திகப்பம் கேட்டு சிறைவைக்கப் பட்டுள்ள 26 முஸ்லிம் வர்த்தகர்களையும்அவர்களின் குடும்பத்தையும் தவிர, இன்று யாழ்பாணத்தில்முஸ்லிம்களே இல்லை!

இவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளில், இன்று சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் உடனடியாக உதவ முன்வரவேண்டும்!

சிறுபான்மைச் சமூகங்களின் விடுதலைப்போராட்டத்திற்கு, இயன்றளவு எல்லாவழிகளிலும் ஒத்துழைப்பை வழங்கிய முஸ்லிம்கள் தாயாக, ஒருபோதும் தமிழ்மக்களோடு முரண்பட்டதில்லை! அவ்வாறிருந்தும் மன்னார் மாவட்ட முஸ்லிம்களை விரட்டியதுபோல, யாழ்ப்பாண முஸ்லிம்களையும் ஏன் விரட்டினார்கள்? கொஞ்சம் நின்று சிந்தித்துப்பாருங்கள்! முஸ்லிம்மாகாணசபையின் எல்லைக்குள் மன்னாரின் முஸ்லிம் பகுதிகளும் கொண்டுவரப்படவேண்டும்! என்று, கோரியதற்காகத்தான் மன்னார் முஸ்லிம்கள் கொள்ளையடித்து விரட்டப்பட்டார்கள்! என்பது' உண்மையென்றால் முஸ்லிம் மாகாணசபைக்கு உட்படாத யாழ், சாவகச்சேரி, முல்லைத்தீவு, கிளிநொச்சி...... முஸ்லிம்களுக்கும் [illegible] அதேகதிஏற்படவேண்டும்? தயவுசெய்து சிந்தித்துப்பாருங்கள்!

அமைச்சர்களும் அவர்களுக்கு ஆலவட்டம் பிடிப்பவர்களும் யாரை ஏமாற்றப்பார்க்கிறார்கள்! முஸ்லிம்களையா?

பாதுகாப்பு வழங்க யோக்கியதை இல்லை! பதவியிலும் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும்! பிரச்சினைக்கு தீர்வுகாணவும் ஏலாது! என்று, தமக்குள்ளேயே முரண்பட்டுக்கொண்டிருப்பவர்களால், பொய்ப்பிரச்சாரம் செய்வதைத்விர வேறு என்னதான் செய்யமுடியும்? அதுமட்டுமல்ல, எப்படி, ஒரு பாதுகாப்பமைச்சர், விடுதலைப்புலிகளின் அநாகரிகமான சட்டவிரோதமான நடவடிக்கைகளைநியாயப்படுத்த முடியும்?

சுருக்கமாக கூறுவதென்றால் - பாதுகாப்பு அமைச்சினதும், ஐ.தே.கட்சியின் அடிவருடிகளினதும் பொய்ப்பிரச்சாரங்களுக்கு, முஸ்லிம் சமூகத்தின் ஐக்கியத்தை குலைத்து-தனித்துவத்தை பாதுகாப்பை மறுக்கும் எந்த யோசனைக்கும் முஸ்லிம் சமூகம் ஏமாந்துவிட முடியாது!

மன்னார்-யாழ் முஸ்லிம்களின் ஆணையைப்பெற்ற அவர்களின் பிரதிநிதிகள்என்றவகையில், வடக்கு-கிழக்கு இணைப்புக்குள் உருவாக்கப்பட உத்தேசித்துள்ள தனித்துவமும் பாதுகாப்பு அதிகாரமுள்ள முஸ்லிம் சபை ஒன்றின் எல்லைக்குள் மன்னார் மாவட்ட முஸ்லிம்களை மாத்திரமல்ல, இனி-யாழ்ப்பாண முஸ்லிம்களையும் உள்ளடக்கவேண்டும்! என்ற, சரியானதும் தீர்க்கதரிசனமுமான நிலைப்பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்துள்ளது!

இந்த லட்சியத்திற்கு குறுக்காக, முஸ்லிம் சமூகத்தை யாருக்கும் அடிமையாக்கி - ஐக்கியதேசிய கட்சிக்கோ அல்லது அதன் அடிவருடிகளுக்கோ, பகடைக்காய்களாக உருட்டுவதற்கும் அல்லது புலிகளின் சதிவலைக்குள் விழுத்துவதற்கும் முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் இடமளிக்க மாட்டாது!

முஸ்லிம்சபை ஒன்றின்அதிகார எல்லைக்குள் மன்னார்-யாழ் முஸ்லிம்களும் இணைந்துகொண்டு, அவர்களின் தனித்துவ - பாதுகாப்பு உரிமைகளையும் உறுதிசெய்துகொண்டு, வாழ்வது அவர்களுக்குள்ள உரிமையாகும். அந்த உரிமையை யாரும் மறுக்கவும் முடியாது! திசை திருப்பவும்முடியாது!

விடுதலைப்புலிகளுடன், மன்னார்,யாழ் முஸ்லிம்கள் முற்றாக நண்பர்களாகமாறி, அவர்களுடன் சேர்ந்து, ஆயுதம் தாங்கி அரசுக்கு எதிராகப்போராடி, நிபந்தனையற்ற வடக்கு-கிழக்கு இணைப்புக்கும் ஆதரவு தெரிவித்து, வடகிழக்கை ஒருதனிநாடாக பிரகடனப்படுத்த முடியுமா? அந்தத்தனிநாட்டில், தனித்துவம் - பாதுகாப்பு எதுவுமே தம்கைவசம் இல்லாத பிரஜைகளாக முஸ்லிம்கள் வாழவேண்டும்! அதற்கு சம்மதிக்க முடியுமா? முடியாது!

ஐ.தே.கட்சியுடனும் அதன் அடிவருடிகளுடனும் சேர்ந்துகொண்டு, கிழக்கை பிரிக்குமாறு கோஷமெழுப்பி, கிழக்கை படுகளமாக்குவதற்கும் புலிகளுடனும் ஏனைய தமிழ்க்கட்சிகளுடனும், தமிழ் மக்களுடனும் நிரந்தரமான பகையை-பழியை ஏற்படுத்திகொள்வதற்குமுடியுமா? அதுவும்முடியாது! இவ்வளவுக்கும், கிழக்கு மக்கள் - வடக்கோடு இணைய விருப்பமா? என்ற, அபிப்பிராய வாக்கெடுப்புக்கும் மன்னார்-யாழ் முஸ்லிம்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை! அதைத் தீர்மானிக்கவேண்டியவர்கள் கிழக்கு மக்கள் மட்டும் தான் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்!

ஒன்றிணைந்த வடகிழக்கில், பரஸ்பரம் தமிழ்-முஸ்லிம் நல்லெண்ணத்தை வளர்த்து, அதேவேளை-தமிழ்மக்களைப் போல முஸ்லிம்களுக்கும்தனித்துவ-பாதுகாப்பு உரிமைகளை உறுதிப்படுத்தி, சிங்கள மக்களின் அபிலாஷைகளையும் மதித்து, ஒரு முஸ்லிம் சுயாட்சி அமைப்புக்குள் வடபகுதியில் வாழும்சகோதரமுஸ்லிம்களையும்இணைத்துக்கொள்வதைத் தவிர, வேறு சிறந்தவழி எதுவுமேயில்லை!

இந்த நிலைப்பாடு, கிழக்கு-மன்னார்-யாழ் முஸ்லிம்களுக்கு மட்டும்மல்ல, இன்ஷா அல்லாஹ - வடகிழககிற்கு வெளியேவாழ்கின்ற முஸ்லிம்களுக்கும் நன்மைதரக்கூடியது! என்பதே எங்கள் திர்க்கமான முடிவாகும்.

இதை, நாம் வென்றெடுப்பதற்கு, கொஞ்சம் பொறுமையோடும் - நிதானத்தோடும் இருக்கவேண்டும்!

நமக்கு ஏற்பட்டுள்ள, சோதனைகளும் வேதனைகளும் நாம் செய்துள்ள தியாகங்களும் ஏற்பட்ட இழப்புகளும் நாளைய சமூகத்தின் விடுதலைக்கான பசளையாகவும் அத்திவாரமாகவும் அமையட்டும்!

அதேவேளை, உலகின் எந்த வெறிகொண்ட வரலாற்றையும் மிஞ்சிவிட்ட, படுபாவிப்புலிகளின் மிகப்பெரும் கொடுமையினால்-கொள்ளையினால் நிலைகுலைந்துபோய் இருக்கும் நம்மனைவருக்கும் எல்லாம்வல்ல அல்லாஹ்தனது அருளை பாலிப்பானாக!

சதிகாரர்களின் சதிவலைகளிருந்தும் சமூகத்துரோகிகளின் செயல்களிருந்தும் எல்லாம் வல்ல அல்லாஹ் நம் [illegible]ானாக!

நமது, [illegible] உறுதிப்பாட்டையும் மேலும் அல்லாஹ், பலப்படுத்துவானாக! ஆமீன்!

## "தேயிலை வருமானத்தில் தொழிலாளருக்கு பங்கு வேண்டும்!" பொகவந்தலாவையில் தலைவர்!

''இந்த நாட்டின் தேசிய வருமானத்தில் தேயிலை உற்பத்தி, ஏற்றுமதியில் முக்கிய பங்கை வகிக்கின்றது' இதன்மூலம் வருடாவருடம் கோடிக்கணக்கான ரூபாவை வருமானமாகப்பெறுகிறோம். இந்த வருமானத்தை ஈட்டுவதற்காக, தோட்டத்தொழிலாளர்கள்; பரம்பரைபரம்பரையாக தமது உழைப்பை பிழிந்து, தம்மை பசளையாக்கி வருகின்றனர். அவர்களுடைய உழைப்புக்கு தகுந்த ஊதியம் இன்றுவரை வழங்கப்படவில்லை! அதனால் அவர்களுடைய வாழ்க்கையில் இன்றுவரை எந்தவிதமான வெளிச்சமும் தென்படவில்லை! இருட்டு காம்பறாக்கள் போலவே அவர்களின் வாழ்க்கையும் இருக்கிறது.

மனிதஉரிமைகளின் மகிமைகளைப்பற்றி, மிகவுமே பேசிக்கொள்கின்ற ஐ.நா. அமையத்தின் சர்வதேச பிரகடத்தின் பின்னரும் இந்த நூற்றாண்டில் மிகவுமே மோசமான வாழ்க்கைத்தரத்தை உடைய தொழிலாளர்கள் இலங்கையின் மலையகத்தில் மட்டும் தான் வாழ்கின்றனர். என்று; சர்வதேச அறிக்கைகள் கூறுகின்றன.

இந்த மக்களின் உழைப்பு, காலம் காலமாக கர்ணகடூரமாக சுரண்டப்படுகின்றது. இவர்கள் தமது அடிப்படை தேவைகளையாவது பெற்றே ஆகவேண்டும்.

இன்று, தொழிலாளர்களுக்குவழங்கப்படும் நான்சம்பளம்; அதன் அதிகரிப்பு, வேலைநாள், சம்பள உயர்வு, சில சில்லறை சமூகநலத்திட்டங்கள் இவைகள் எதுவுமே தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினையை நிரந்தரமாக தீர்த்துவிடமாட்டாது! ஆயினும் இவற்றை வென்றெடுப்பதற்கான போராட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்வோம். அதேவேளையில், ''நிலம் உழுபவனுக்கே சொந்தம்'' என்ற கோட்பாட்டில் நின்றுகொண்டு; உற்பத்திக் காரணிகளில் முக்கிய இடம் வகிக்கும் தோட்டத்தொழிலாளர்களின் உடலுழைப்பு - அதிலிருந்து பெறப்படும் உற்பத்தி ஏற்றுமதி, அதன்மூலம் பெறப்படும் தேசிய வருமானம்! அதில், தோட்டத்தொழிலாளர் பங்காளிகளாக்கப்படவேண்டும். என்ற. உயர்ந்தமனிதாபிமான லட்சியத்தை தொழிலாளர் விடுதலைக்காங்கிரஸ் இன்று பிரகடனம் செய்கின்றது. இந்தலட்சியத்தை அடைவதற்கு எந்த தியாகத்தைச் செய்யவும் நாம் தயாராக இருக்கின்றோம்.''

பொகவந்தலாவையில்; சகோ.எம்.பி. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற தொழிலாளர் விடுதலைக் காங்கிரஸ் அலுவலகத் திறப்புவிழாவின்போது, தேசிய தலைவர் சகோ. அஷ்ரஃப் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நுவரெலிய மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் சகோ. வாசுதேவன் தே.கொ.ப செயலாளர் சகோ. மருதூர்க்கனி சகோ. ராமையா; சகோ. முஸ்தபா; ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கட்சிகளோடு இன்னும் முஸ்லிம் கட்சி ஸ்தாபனங்கள் பேசத்தான் வேண்டுமா?

48. ★ கே: கொர்பச்சேவுக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு கிடைத்ததைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எஸ்.எம்.றபீக்,
கொழும்பு-14.

ப: மேலெழுந்தவாரியாக, உலக சமாதானத்துக்காக கொடுக்கப்பட்டபரிசாக அது தோன்றினாலும், உண்மையில் முதலாளித்துவ சமரசத்திற்கு அளிக்கப்பட்ட பரிசாகவே நாம் அதைக் கருதுகிறோம்.

லண்டனில்அஞ்ஞாதவாசம் செய்துவரும் ரஷ்யக்கவிஞர் ஒருவர், சமீபத்தில் வார்ஸோ பல்கலைகழகத்தில் கூறிய ஒரு கூற்று நினைத்துப்பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

''கொர்பச்சேவை, மேற்குலகம் செயற்கைதளமாக்கட்டி, வளர்த்து, தட்டிக்கொடுத்து முட்டுக் கொடுத்துவருகின்றது நிலைகுலைந்து போய்க் கொண்டிருக்கும் சாம்ராஜ்யம் ஒன்றின் தலைவரின் அதிகாரத்தை காப்பாற்றுவதற்காக மேற்குலகம்காட்டியிருக்கின்ற 'சிக்னல்' தான் கொர்பச்சேவுக்கு வழங்கப்பட்டிருக்கும் நோபல் பரிசாகும்! ஒரு காலம் வரும், அப்போது அரசியல் வீழ்ச்சி கண்ட 'கொர்பீ' கலிபோர்னியாவுக்கு ஓடுவார்! தனது அந்திம காலத்தை, ஓர் அரசியல் அகதியாக அமெரிக்காவில் கழிப்பார். அப்போது நரங்களெல்லோரும் எங்கள் சுதந்திர சோவியத் தாயகத்துக்கு செல்வோம்.''

51. ★ கே: இந்த ஆண்டில் இஸ்லாமிய உலகத்தில் நடந்த ஓர் உருப்படியான நிகழ்ச்சியை சொல்லுவீர்களா?

அ.அப்துல்கரீம்,
கல்முனை-3.

ப. சொல்லாமே! ஈராக், குவைத்தை அணைத்துக் கொண்டதைச் சொல்லலாம். இன்று, அமெரிக்காவுக்கும் மேற்குலகத்திற்கும் சதாம் ஹுசைன் ஒரு சிம்ம சொப்பனமாக இருக்கிறார்.

பலஸ்தீனமக்களை தமது சொந்த மண்ணிலிருந்து அடித்துவிரட்டினார்கள். அது மாத்திரமல்ல, அமெரிக்காவும் அதன்கூட்டாளிகளும்சேர்ந்து நாடோடி லேவாதேவிக்காரர்களான யூதர்களுக்கு இஸ்ரவேல்என்ற ஒரு நாட்டையே உருவாக்கி கொடுத்தார்கள். அவர்கள் விரும்பியிருந்தால் அமெரிக்காவிலேயேஅதைஉருவாக்கி கொடுத்திருக்கலாம், லாம். ஆனால், அவர்கள்திட்டமிட்டே மத்திய கிழக்கில் உருவாக்கினார்கள். உலக வரலாற்றில் நடந்த மாபெரும் கொடுமை இது. இதில், துரதிஷ்டம் என்னவென்றால் அரபுமண்ணையும் அங்குள்ள வளங்களையும் ஆக்கிரமித்து அபகரிப்பதற்கு வசதியாக அங்கு பொம்மை அரசுகளையும் உருவாக்கினார்கள்!

இந்த அமெரிக்கா, வியட்நாம் தொடக்கம் கிரானடா பனாமா, பலஸ்தீன், மத்திய அமெரிக்கா, தென்னாபிரிக்கா .....என்று செய்தது என்ன? இதற்கு என்ன பெயர் ஆக்கிரமிப்பில்லையா? ஆனால் அடிப்படையில்ஈராக்-குவைத் பிரிக்கமுடியாத ஒரே பூமி. பிரித்துவைத்தது, அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் தான்! ஐநாவின்பொருளாதாரத்தடை என்பதெல்லாம் அமெரிக்காவின் சித்து விளையாட்டு!

முதலில் அரபு மண்ணிலிருந்து அமெரிக்கா, மேற்கத்திய ஆக்கிரமிப்பு படைகள் வெளியேறவேண்டும். ஈராக்-குவைத் பிரச்சினையை அந்த அரபுமக்கள் பேசித்தீர்த்து கொள்வார்கள். ஆடு நனைகிறதென்று அமெரிக்கா மேற்கத்தியஓநாய்கள்அழுகின்றன! எகிப்தியமன்னராட்சி கவிழ்க்கப்பட்ட போது, பாறூக் மன்னர் கூறிய அந்தக்கூற்றை மத்தியகிழக்கு மன்னர்களுக்கும் ஷேக்குகளுக்கும் நினைவுபடுத்தவேண்டியிருக்கிறது.

''எதிர்காலத்தில், உலகத்தில் இரண்டே இரண்டு மன்னர்கள் மட்டும்தான் மிஞ்சுவார்கள்! அதில் ஒருவர் சீட்டுக்கட்டில் இருக்கும் மன்னர்! மற்றவர் பிரித்தானியாவின் முடிக்குரிய மன்னர்!''

52. ★ கே: மொஷாட் உளவு ஸ்தாபனத்தின் இரட்டைவேடம் அம்பலமாகிவிட்டதே?

எம்.ஐ.எம்.பழீல்,
அக்கரைப்பற்று-3.

ப: இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமே இல்லை! எதிர்பார்த்ததுதான்பணத்திற்காக அவர்கள் எதையும் செய்வார்கள். அதைத்தான் இலங்கையிலும் செய்திருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, தமதுயூத நலன்களுக்காக எங்கும் எதையும் செய்து வருகிறார்கள்.

இலங்கையில் சிங்களவர்களையும் தமிழர்களையும் மோதவிடுவதற்கு மாத்திரமல்ல தமிழர்களையும் முஸ்லிம்களையும் மோதவிடுவதற்கு அவர்கள் மேற்கொண்ட சதி முயற்சிகள் மிகவிரைவில் அம்பலத்திற்குவரும்.

இஸ்லாத்தின் பரமவிரோதிகளான இந்த யூதர்கள், மொஷாட்டினூடாக உலக முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படும் முயற்சிகள் எந்த அளவுக்கு வெற்றிபெற்றிருக்கின்றதால், அரபுலகத்தின் மன்னர் பெருமான்களையே தமது வலைக்குள் வீழ்த்தி இருப்பதுதான்!

49. ★ கே. ''தற்போதைய சூழ்நிலையில் முஸ்லிம்கள் மாத்திரம்தான் வாழவேண்டும்' என்ற கோரிக்கையை முன்வைப்போருக்கு மட்டும்தான் புகழும் அரசியல்லாபமும் கிடைக்கிறது'' என்றும், அவ்வாறு பேசாதவர்கள் முஸ்லிம் துரோகிகளாக கணிக்கப்படுகின்றனர்'' என்றும் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் மூக்கால் அழுதிருக்கிறாரே... ஞானியார், படித்தீர்களா?

ஏ. ஆர். றஹமத்துல்லா,
காஸிம்றோட், கல்முனை-7.

ப: இந்தமுஸ்லிம்அமைச்சருக்குஎன்னபிடித்திருக்கிறதோ தெரியவில்லை! முஸ்லிம்கள் மாத்திரம்தான் வாழவேண்டும்'' என்று எந்த முஸ்லிமாவது நினைப்பானா? அல்லது எந்த முஸ்லிம் தலைவராவது அப்படி கோரிக்கை விடுப்பார்களா? அல்லது, அப்படித்தான் ஒரு கோரிக்கையை முன்வைக்கத்தான் முடியுமா? இவருக்கு என்ன நடந்துவிட்டதோ தெரியவில்லை!

ஒரு வேளை, இப்படிப்பேசினால் தமிழ் மக்கள் மத்தியில் எடுபடலாம், கூட்டத்தில்'அப்பளாஸ்' வாங்கலாம் என்றுநினைத்து மனிசன் பேசியிருக்கக்கூடும்! அதுபிழைச்சிப்போச்சு! மேடையிலே பேசுவது ஒருகலை! கருத்துக்களை நாசூக்காக, நாகரிகமாக கையாளவேண்டும். தவறினால், இப்படித்தான், நாக்குக்கும் மூளைக்கும் தொடர்பில்லாமல் சொற்கள் வந்து விழுந்துவிடும்! போதாக்குறைக்கு,

''...அப்படிப்பேசுபவர்களுக்குத்தான் புகழும் அரசியல் லாபமும்கிடைக்கின்றது...என்று மூககால் அழுது காட்டி பாவம் புகழுக்கும் அரசியல் லாபத்துக்கும் ஏங்குகிறார்! கொட்டு நெல்லும் குறையப்படாது மக்கள் வயிறும் வாடக்கூடாது'' என்றால் எப்படி?

கௌரவ அமைச்சருக்கு, அவர்மட்டும்தான், உயர்ந்த மனிதாபிமானி! பெரும் தேசியவாதி! என்ற நினைப்பு! மற்ற முஸ்லிம் தலைவர்கள அனைவருமே, ''முஸ்லிம்களும் வாழவேண்டும்'' என்று, பேச, இந்த முஸ்லிம் அமைச்சர்மட்டும் 'எல்லாரும் வாழவேண்டும்' என்று பேசுகிறாராக்கும்! அவர் வாழ்க! நீடூழி வாழ்க!

50. ★ கே: தமிழர் கட்சிகளோடு இன்னும் முஸ்லிம் கட்சி, ஸ்தாபனங்கள் பேசத்தான் வேண்டுமா?

எம்.அலி.அக்பர்,
ஓட்டமாவடி.

ப. தமிழர் கட்சிகளில், தற்போது, அரசியல் தீர்க்கதரிசனத்தோடு சிந்திக்கின்ற தலைவர்கள் அருகிப்போனது தமிழர்களுக்கு மட்டும்மல்ல முஸ்லிம்களுக்கும் துரதிஷ்டம தான்! ஆயினும் என்னசெய்வது? மனிதநாகரிகமே பேச்சுவார்த்தைதானே! பேச்சுவார்த்தைகள், எத்தனைதடவைகள் தோற்றாலும் தொடர்ந்து பேசுவதன்மூலம் மாத்திரம்தான் எந்தத்தீர்வையும் காணமுடியும். எனவே தமிழ்க்கட்சிகளோடு முஸ்லிம் கட்சிகள் தொடர்ந்து பேசுவதும் தமிழ்-முஸ்லிம் கட்சிகளோடு அரசாங்கமும் ஏனைய கட்சிகளும் தொடர்ந்து பேசுவதும் நல்லதுதான்.

ஆகக்குறைந்தது, சிங்கள பேரினவாதத்தின் போக்கையும் அதன் மேலாதிக்கத்தையும் எதிர்ப்பதற்காவது தமிழர்களும் முஸலிம்களும் பரஸ்பரம் தனித்துவத்தையும் பாதுகாப்பையும் அங்கீகரித்துக்கொண்டு தொடர்ந்து போராடுவதற்காகஐக்கியப்பட்டே ஆக வேண்டும்! இதில்தவறினால்..... ஆருக்கு நஷ்டம்? ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குதான கொண்டாட்டம்!

52. ★ கே: ஈராக்-அமெரிக்கா யுத்தம் மூளுமா?

ஏ.அக்கர் அலி,
நிந்தவூர்.

ப: இப்போதைக்கு யுத்தமாவது மூளுவதாவது! ஈராக் முதலில யுத்தத்தை தொடங்கமாட்டாது. அமெரிக்காவும் அதன கூட்டாளிநாடுகளும் கண்ணாடி வீட்டுக்குள் இருந்துகொண்டு, கல்விட்டுக்கு கல்லெறிய நினைக்கமாட்டார்கள் ஆனால், ஆயுதவியாபாரிகள் அவசரப்படுவார்கள்! இந்த ஆயுத வியாபாரிகளும் தாலமுதலாம்இரண்டாம்உலகப்போர்கள் மூளுவதற்குகாரணமாயிருந்திருக்கிறார்கள்,

## கேள்விக்கென்னபதில்!
## "தர்வேஷ்ஞானி"

53. ★ கே, எனக்கு உதவியாக இருந்து, தனதுஇனத்தை மாத்திரமல்ல, எனது எதிரிகளையும் காட்டித்தரவேண்டும் என்பதற்காக ஒரு நாயை வாங்கி வளர்த்தேன். அதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தேன். அந்த நாயும்நன்றி விசுவாசத்தோடு என்னோடு நடந்து வருகிறது. ஆனால், தனதுஎஜமான விசுவாசத்தை மேலும் மேலும் தெரிவிப்பதற்காக நேரம் காலம் தெரியாமல் நாளு நல்ல மனுசருக்கு முன்னால் மாத்திரமல்ல, எனது படுக்கை அறைக்கே வந்து கொஞ்சிக்குலாவி, நக்கி முகர்ந்து, வாலை ஆட்டி.... என்னை ஆகவும் சங்கடத்துக்குள் தள்ளி பெரும் சாஷ்டாங்கம் செய்கிறது.....! இது ஆகவும் கூடிப்போச்சி! இதற்கு என்னசெய்யலாம்? ஓர் ஆலோசனை கூறுங்களேன்?

ஏ.இனாயத்துல்லா,
சாய்ந்தமருது-3.

ப; இதற்கு நான் ஆலோசனைகூறுவதைவிட, நீங்களே ஒரு நாளைக்கு, அரிகண்டம் பொறுக்க முடியாமல் எட்டி சப்பாத்துகாலால் சொத்தையில் ஒந்துவீர்கள்! அதற்கு பிறகு எல்லாம் சரிவரும்!

54. ★ கே: சமீபத்தில் ''ஹராம் குட்டி...'' என்று, தொடங்கி ''படு அயோக்கியத்தனமாக'' அனாமதேயமாக கொழும்பில் அச்சிட்டு கல்முனையில் வெளியிடப்பட்ட ஒரு நோட்டீஸை பற்றி ஞானியாரே என்ன நினைக்கின்றீர்கள்?

ஏ.எம்.எம்.நஸீர்,
யூ.எல்.எம்.நிஸார்,
செய்லான் றோட்'
கல்முனை-3.

ப. இதில் நினைக்க எதுவுமே இல்லை! நீங்கள்குறிப்பிட்டது போல ஊர்பேர் எதுவுமே போடாமல் சில ஹராம் குட்டிகள் சேர்ந்து வெளியிட்ட நோட்டீஸ்தான்! இப்படிபட்ட ''எம்பில பொறந்த'' நோட்டீஸ்களை, கௌரவமான மனிதர்கள் மட்டுமல்ல, சராசரி மனிதர்கள் கூட கணக்கெடுப்பதில்லை! மனித நாகரிகம் எவ்வளவோ முன்னேறிவிட்டது! ஆனாலும் தேவையானால்... நாய்களுக்கு, நாய்களின்பாஷையில்பதில் சொல்லுவதற்கும் நம்மால் முடியும்! ஆனால், நமக்கு அதற்கு நேரமில்லேயே!

# பிரதமர் வி.பி.சிங் நின்று பிடிப்பாரா?

55. ★ கே: இந்தியப்பிரதமர் விபிசிங் நின்று பிடிப்பாரா?

ஏ.ஜே.எம்.நிழாம்,
நாம்புஞவ.

ப: மனிதர் பெரும் சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டு நிற்கிறார். மண்டல் கமிஷன் அறிக்கை அமுல்! அதன்மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 50 வித ஒதுக்கீடு! அதை எதிர்த்து உயர்ஜாதிஇந்துக்கள்நடத்தும் ஆர்ப்பாட்டம்! கொலைகள் தற்கொலைகள்... தோளோடு தோள்கொடுத்து ஆட்சி அமைக்க உதவிய தேவிலால் உதவிப்பிரதமர் பதவியே உதறித்தள்ளிவிட்டு உடைத்து கொண்டு போயிருப்பது...... தேர்தல்காலத்தில், போபர்ஸ் பிரச்சினையில் ரஜீவை இழுத்துப்போட்டுவிட்டு, இப்போது அதை நிரூபிக்கமுடியாமல் மக்களை ஏமாற்றியது...பஞ்சாப் காஷ்மீர் பிரச்சினை மேலும் தீவிரமடைந்திருப்பது, கிராமப்புற மக்களின் மிகமோசமான அதிருப்தி...டில்லிபாபர்பள்ளி வாசல்இருக்குமிடத்தில் ராமர் கோயில் கட்டுவதற்கு இந்து வெறியர்கள் எடுக்கும் முயற்சி அதற்கு ஆதரவாக பாரதிக ஜனதாகட்சித் தலைவர் அத்வானி களத்தில் குதித்து ஆர்பாட்ட ஊர்வலம் என்று...... நடாத்தும் எதிர்ப்பணிகள்! அதற்குஎதிராக விபிசிங் எடுத்திருக்கும் உறுதியான தீர்மானம் - நடவடிக்கைகள் ......... என்றுமே இல்லாதவாறு மிக மோசமாக ஏறிவரும் விலைவாசிகள்இவைகளால், விபிசிங் அரசு நின்று பிடிப்பது என்பது முடியாமலே போய்விடும்! ஆனால், ஆபத்து என்னவென்றால் இந்திய ஒருமைப்பாடு ஆபத்தில்இருப்பதாகஅரசியல் அவதானிகள்கருதுகிறார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Lanka Pen Co.
Importers of Ball Point Pens, Refills
Stationery Items &
Household Goods etc.
Phone : 24921
Telex : 21754 FAYAZ CE
Fax : 548636
Att : LANKA PEN CO
44 2nd Cross Street
Colombo-11 Sri Lanka

## வாசகர் கவனத்திற்கு!

அஸ்ஸலாமு அலைக்கும்!

ஒரு நல்ல செய்தி! இந்த இதழிலிருந்து ''முஸ்லிம்காங்கிரஸ்'' மாதத்திற்கு இரண்டு இதழ்களாக வெளிவரும். இதன் மூலம் இன்றைய அரசியல் நெருக்கடிகள், நிலைப்பாடுகளைக் குறித்து, கொஞ்சமாவது சுடச்சுட செய்திகளை பகிர்ந்துகொள்ளமுடியும்.

அத்துடன், சமகால அரசியல் விவகாரங்களை மதிப்பீடுசெய்து ஆக்கபூர்வமான விமர்சனங்களை எழுத விரும்புகின்றவர்கள் இரண்டுபக்கங்களுக்குள்எழுதிஉதவுங்கள்.

ஆசிரியர் ''மருதூர்க்கனி''

முஸ்லிம் காங்கிரஸ்

# முஸ்லிம்களின் விடுதலையிற்தான் முஸ்லிம்கள் அபிவிருத்தி தங்கியிருக்கிறது!

## முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டில் தலைவர், உரை

# தொடர்ந்து முஸ்லிம்கள் அழிக்கப்பட்டால் தலைநகர் தொடங்கி தீவு முழுவதும் வன்செயல் வெடிக்கும்! தவிசாளர் சூளுரை!

கொழும்பு மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் மாநாடு மாவட்ட அமைப்பாளர்சகோ. அல்-ஹாஜ். எம்.பாறுக் தலைமையில் பழையநகரசபைமண்டபத்தில் சமீபத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக தலைவா எம். எச். எம். அஷ்ரஃப் அவர்களும் விஷேட விருந்தினராக தவிசாளர், எம்.எச் சேகு இஸ்ஸதீன் அவர்களும் கலந்து கொண்டனர்.

**தலைவர் தனது உரையின் போதுபின்வருமாறு குறிப்பிட்டார்:-**

''முஸ்லிம்காங்கிரஸ்மேடைகளிலெல்லாம் முஸ்லிம் சமூகத்தின் விடுதலைபற்றியே பேசிவந்திருக்கிறோம். அடிமைப்பட்டுக் கிடக்கும் முஸ் சமூகத்தை விடுவிப்பதற்குஅரசியல் அதிகாரத்தை தாருங்கள்! என்றுதான் கேட்டோம். 'விடுதலையைத்தவிர, வேறு எதையும் தருவதற்கு இப்போதைக்குஇல்லை!' என்று திட்டவட்டமாகவே பேசியிருக்கிறோம். அதிகாரத்தை தந்தமக்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்காமல், அபிவிருத்திகளை நினைப்பதற்கு முடியாமல் இருக்கிறது. முஸ்லிம்களின் உண்மையான அபிவிருத்தி, முஸ்லிம் சமூகத்தின் விடுதலையிற்தான் தங்கியிருக்கிறது அப்படித்தான், அபிவிருத்தியில் கவனம் செலுத்த நினைத்தாலும், நாம் மக்களின் ஆணையைப் பெற்றதிலிருந்து, துரதிஷ்டவசமாக தேசிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கவேண்டிஏற்பட்டது.

வட கிழக்கில் முஸ்லிம்களின் தனித்துவமும் பாதுகாப்பும், அழிககப்பட்டு அவர்கள் அடிமைகளாக்கப்படும் பேராபத்தை எதிர்நோக்கவேண்டியிருக்கிறது. அதனாற்தான், வடகிழக்கு அதிகாரப்பகிர்வின்போது, முஸ்லிம்களின் பாதுகாப்பு தனித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக ஒரு முஸ்லிம் மாகாணசபையைப் பெறுவதற்கான போராட்டத்தை முன்னெடுத்து செல்லவேண்டியிருக்கிறது. இதற்கான பேச்சுவரார்த்தைமுயற்சிகளில்தான் நேரமும் காலமும் கழிகின்றது. ஆனபோதிலும்கூட, கடந்தமாகாணசபைத் தேர்தல்களிலும் பொதுத்தேர்தல்களிலும் முஸ்லிம்காங்கிரஸுக்கு பெரும் வெற்றியை ஈட்டித்தந்து, இலங்கை முஸ்லிம்களின் அரசியல் எழுச்சிக்கே உதாரணமாகத் திகழ்ந்த கொழும்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு நாம் நன்றி கூற கடமைபட்டுள்ளதோடு, அவர்களின் அபிவிருத்தியையும் நாம் மிகவும் கவனத்திற் கொண்டிருக்கின்றோம்.

முஸ்லிம் காங்கிரஸ் எனக்கு என்ன செய்தது என்று கேட்காமல் முஸ்லிம்காங்கிரஸுக்கு முஸ்லிம் சமூகத்துக்கு என்ன செய்தோம்? என்றுகேளுங்கள். சொந்தஅபிவிருத்தியை சொந்தக்காலில் நின்று தேடுங்கள். சமூகத்தின் அபிவிருத்தியை சமூகம் தனது சொந்தக்காலில் நின்று தேடவேண்டும். தடைகள் ஏற்பட்டால் அதை உடைத்தெறிந்து, தீர்வைத் தேடுவோம்! இங்கு, கட்சிகிளைகள புனரமைப்பு வேலைகள் பற்றி, பேசப்பட்டது. அமைப்பாளர்கள் இதில்பூரணகவனம் செலுத்த வேண்டும். கிராண்பாஸ அமைப்பாளர் சகோ. உஸ்மான் அவர்களால், கொழும்பு மாவட்டம், மூன்று பிரதான பொருத்தமான பிரதேசங்களாக வகுக்கப்பட்டு மூன்று அமைப்பாளர் நியமிக்கப்பட்டால் கட்சி அமைப்பு வேலைகளை இலகுவாக்கி நல்ல பயனைப் பெறமுடியும். என்ற. கருத்து முன்வைக்கப் பட்டது. இது ஏற்புடையஒரு கருத்தாக எனக்குத் தென்படுகிறது. எனவேஇதை விரைவில் பரிசீலனை செய்யலாம் என்று எண்ணுகிறேன்''

**தவிசாளர் அவர்கள் தனது உரையின்போது:-**

வடக்கு-கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு எவ்வளவு தூரம் முக்கியமானது என்பதை தமிழர் கட்சிகள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

வடக்கு-கிழக்கிலுள்ள முஸ்லிம்களை தமது இஷ்டத்துக்கு ஆட்டிப்படைக்கலாம் என்ற கனவிலிருந்து அவர்கள் இன்னும் விடுபடவில்லை.

முஸ்லிம்களைப்படுகொலை செய்வதும், கடத்துவதும் சித்திரவதை செய்வதும், முஸ்லிம்களின் உடைமைகளை அபகரிப்பதும் கொள்ளையடிப்பதும், முஸ்லிம்கள்மீது வரி விதிப்பதும், அத்துமீறுவதும் தமக்கு மறுக்க முடியாத உரிமைகள் என்று தமிழர் ஆயுதபாணிக்கட்சிகள் நம்பிக் கொண்டிருக்கின்றன.

முஸ்லிம்கள் மதத்தால் மட்டுமே முஸ்லிம்கள்; இனத்தால் தம்மைப்போன்றதமிழ்த்திராவிடர்களே என்று வலிந்து கட்டப்பட்ட மாயையில் முஸ்லிம்களின் அரசியல் அதிகாரத்தை தமது கைகளில் அடக்கிகொள்ளப்பார்க்கின்றனர்,

தமக்குத் தேவைபடும் போதெல்லாம் முஸ்லிம்களை இஸ்லாமிய தமிழர்கள் என்று கூறி தம்மோடு ஒரே நுகத்தில் கட்டிவிடப்பார்க்கின்றனர்.

முஸ்லிம்கள் மீது தமிழ்ப் பயங்கரவாதிகள் புரிந்துவரும் அட்டூழியங்கள் அனைத்தையும் நியாயப்படுத்த அவர்கள் செய்யும் பத்தாம் பசலித்தனமான தந்திரமே இந்த இஸ்லாமியத்தமிழர்புலுடாவாகும்.

இந்தப் தமிழ்ப் பயங்கரவாதக் கட்சிகளானபுலிகளும், ஈ.பி.ஆர்.எல்.எப்.,ஈ.என்.டி, எல்.எப்.ரெலோ, புளோட், அனைத்துமே தமிழ் இனவெறிககட்சிகளாகும்.

1989 நொவம்பரில்ஈ.பி.ஆர். எல்.எப், ஈ.என்.டி.எல்.எப். மாகாணசபை கூட்டாட்சியினர்முஸ்லிம்பிரதேச பொலிஸ் நிலையங்களைத் தாக்கியபோது, தமிழ் பொலிஸாரை தப்பி ஓடவைத்துவிட்டு 49 முஸ்லிம்பொலிஸாரை நிராயுதபாணிளாக்கிச் சுட்டுக் கொன்றனர்.

1990 ஜூனில் விடுதலைப் புலிகள் பொலிஸ் நிலையங்களைச்சுற்றிவளைத்து பொலிஸாரைசரணயடையச் செய்தபோதும், தமிழ் பொலிஸாரை தப்பிஓடவிட்டு நூற்றுக்கணக்கான முஸ்லிம் பொலிஸாரை காட்டு மிராண்டித்தனமாக சுட்டுக்கொன்றனர்.

ஆகமொத்தத்தில் விடுதலைப் புலிகளும், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப், ரெலோ, புளோட் அனைத்துமே இனவெறிபிடித்த முஸ்லிம்விரோத பயங்கரவாதிகள்தான்.

இந்தத் தமிழ்ப்பயங்கரவாதிகளிடமிருந்து முஸ்லிம்களைக் காப்பது நமது கடமையாகும். இதற்கு அரசியல் ரீதியாக நாம் செய்து முடிக்க வேண்டியது முஸ்லிம்களுக்கென வடக்கு-கிழக்கில்சட்டம் ஒழுங்கு, அதிகாரங்களை உள்ளடக்கிய ஒரு சபையை ஏற்படுத்துவதுதான்.

இதற்குத் தமிழர் கட்சிகள் இணங்கவில்லையானால் வடக்கு-கிழக்கு பிரிவதைத் தடுக்கமுடியாது போய்விடும். அதனால் தமிழ்ப்பயங்கரவாதிகளின் போராட்டங்களும் இழப்புகளும்விழலுக்கிறைத்த நீராகவே முடியும்.''

கொழும்பு மாவட்ட பிரதி தலைவர் சகோ.அல்ஹாஜ் சஹாப்தீன், கிராண்ட்பாஸ் அமைப்பாளர், சகோ.ஏ.எம். எஸ்.உதுமான் வாலிபர் முன்னணியில் பிரதித் தலைவர் சகோ. சம்ஹூன், அல்ஹாஜ் சகோ. அபூபக்கர் எம்.பி. சகோ. இனாயத்துல்லா ஜே.பி. திரு.தம்பையா திலகஜோதி. மாகாணசபை உறுப்பினர்கள், சகோ. சுஹைப் ஏ.காதர், சகோ. அஷ்வர் அமீர் கட்சியின் பொதுச் செயலாளர் சகோ.எம்.ஜே.ஏ. ஷஹீத் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

முஸ்லிம் பாரம்பரிய கலை நிகழ்ச்சியான கோலாட்டமும் இடம் பெற்றது: நிகழ்ச்சியில் பங்குபற்றியவர்களுக்கு பரிசளிப்பும் நடைபெற்றது.

## ஜனாதிபதிக்கு தலைவர் அவசர தந்தி!

### கொழும்பில் அகதிகளுக்கு அரசு வழங்கிய நிவாரணம் நிறுத்தமா?

கொழும்பு மாவட்டத்தில், தனிப்பட்ட, தமது உறவினர் நண்பர்களின் வீடுகளிலும் வடக்கு கிழக்கு மாகாண அகதிகள் தங்கியிருக்கின்றனர். அவர்களுக்கு இரண்டொரு மாதங்களாக நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. அந்த நிவாரணம், திடீரென்று இம்மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டிருப்பதாக தெரியவருகிறது!

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த, உதவி அரசாங்க அதிபர்களில் சிலர், ''அகதிகளுக்கு நிவாரணம் வழங்கப்படமாட்டாது'' என்று அறிவித்துள்னர்.

இதேவேளை, அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்திற்கும் சமூகசேவைகள் திணைக்களத்திற்குமிடையில் ஏற்பட்டிருக்கும் நிர்வாக இழுபறிகள் காரணமாகவே ''நிவாரண நிறுத்தம்'' ஏற்பட்டிருக்க கூடும்! என்ற, சந்தேகமும் நிலவுகின்றதாம்!

''எதுவாக இருந்தபோதிலும், படுபாவிப்புலிகளான, கொள்ளைகாரர்களிடத்தில் தாம் தேடிய தேட்டங்கள் அனைத்தையும் பறிகொடுத்துவிட்டு உயிரைமட்டும் ககளில் பிடித்துக்கொண்டு நிர்க்கதியற்று வடகிழக்கிலிருந்து முஸ்லிமகள்இடம் பெயர்ந்துள்னர். கொழும்பு மாவட்டத்திலுள்ள தமது உறவினர்-நண்பர்களின் வீடுகளில் தஞ்சமென வந்து சேர்ந்தனர். வசதியாக கௌரமாக வாழ்ந்து, அகதிகளாக்கப்பட்ட இவர்களுக்கு, அரசாங்கம் வழங்கி வந்த நிவாரணம், சற்று ஆறுதலாக இருந்தது. ஆனால, இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இந்த நிவாரணம் திடீரென்று நிறுத்தப்பட்டிருப்பது பெரும் வேதனைக்குரிய விஷயமாகும்.

எனவே, கொழும்பு மாவட்டத்திலிருக்கும் அகதிகளுக்கும் புதிதாக, மன்னார், யாழ்ப்பாண மாவட்டங்களிலிருந்து வந்து சேரும், அகதிகளுக்கும் தொடர்தும் நிவாரணம் வழங்கப்படுவது மனிதாபிமான அடிப்படையில் தர்மமும் நீதியுமாகும்.'' என்று, மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் கவனத்திற்கு தேசியத் தலைவர் சகோ. அஷ்ரஃப் அவர்கள அனுப்பிவைத்துள்ள அவசர தந்தியில் வேண்டுகோள்விடுத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு - 2, இல: 51, வொக்ஷல்லேனிலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸால் அதன் அச்சுச்சாதனங்களுடன் அச்சிட்டுவெளியிடப்பட்டது.